# யா/யூனியன் கல்லூரி

# சைவநெறி

## 01.விநாயகர்

1. வெற்றி வேற்கை என்னும் நூலை இயற்றியவர் யார்?
   ॐ அதிவீரராம பாண்டியன்

2. ஓம் எனும் பிரணவ மந்திரப் பொருளாய் விளங்குபவர் யார்?
   ॐ விநாயகர்

3. பிள்ளையார் வழிபாடு இடம்பெறும் இடங்கள் மூன்றினைக் குறிப்பிடுக?
   ॐ வீடு, ஆற்றங்கரை, குளக்கரை, ஆலமரத்தடி, அரசமரத்தடி

4. விநாயகரை வழிபடுவதனால் கிடைக்கும் பயன்கள் சில கூறுக
   ॐ சகல சௌபாக்கியங்களும் கிட்டும்
   ॐ எமக்கு வருகின்ற துன்பங்கள் யாவும் எளிதாக நீங்கிவிடும்

5. எந்தச் செயலையும் செய்யத் தொடங்கும் முன் யாரை முதலில் வணங்க வேண்டும்?
   ॐ விநாயகர்

6. விநாயகரின் மறுபெயர்கள் எவை?
   ॐ கணபதி
   ॐ விக்னேஸ்வரன்
   ॐ கணேசன்
   ॐ ஆனைமுகன்
   ॐ பிள்ளையார்
   ॐ கஜமுகன்

7. அகத்தியரின் கமண்டல நீரைக் காக்கை வடிவில் வந்து கவிழ்த்தவர் யார்?
   ॐ பிள்ளையார்

8. விநாயகரின் திருவுருவத்தை எளிதாகப் பிடிக்கக் கூடிய பொருட்கள் எவை?
   ॐ மஞ்சள்
   ॐ சந்தனம்
   ॐ சாணம்

9. கஜமுக அசுரன் தேவர்களை எத்தனை முறை தோப்புக்கரணம் போடச் செய்தான்?
   ॐ 1000முறை

10. கஜமுகாசுரன் விநாயகருடன் போர் புரிந்து இறுதியாக எவ்வாறு மாறினான்?
    ॐ பெருச்சாளி

11. விநாயகரை வழிபடும் பொருட்கள் எவை?
    ॐ பூக்கள்
    ॐ இலைகள்
    ॐ அறுகம்புல்

12. விநாயகருக்குரிய வழிபாட்டு முறைகள் எவை?
    ॐ சிதறு தேங்காய் உடைத்தல்.
    ॐ நெற்றியில் குட்டிக்கும்பிடுதல்.
    ॐ தோப்புக்கரணம் போடுதல்.

13. விநாயகர் என்பதன் பொருள் என்ன?
    ॐ தனக்கு மேல் தலைவர் இல்லாதவர்

## 02.சைவ இல்லம்

1. நீங்கள் அன்றாடம் வீட்டில் கடைப்பிடிக்கும் சமய பழக்க வழக்கங்களைக் குறிப்பிடுக?
   - ௐ விளக்கேற்றுதல், இறைவழிபாடு செய்தல், திருமுறை ஓதுதல்
   - ௐ பெற்றோரை வணங்குதல்

2. திருவிளக்கேற்றுவதற்குப் பயன்படுத்தக் கூடிய எண்ணெய் வகைகள் எவை?
   - ௐ நெய், நல்லெண்ணெய், தேங்காயெண்ணெய்

3. இறைவழிபாட்டின் போது பஞ்சபுராணம் எவ்வொழுங்கில் பாடப்படவேண்டும்?
   - ௐ தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம்

4. விசேட தினங்கள் மூன்றினைக் குறிப்பிடுக?
   - ௐ பண்டிகைகள், விழாக்கள், விரதங்கள், மங்கலச்சடங்குகள்

5. விசேட தினங்களின் போது வீட்டில் பின்பற்றக்கூடிய சமய பழக்க வழக்கங்களைக் கூறுக?
   - ௐ வீடுகளையும் சுற்றுப்புறங்களையும் தூய்மைப்படுத்துதல்
   - ௐ புத்தாடை அணிதல்.
   - ௐ வீட்டு வாசலில் கோலம் போடுதல், நிறைகுடம் வைத்தல், மாவிலை தோரணம் கட்டுதல்.
   - ௐ புதிய பாத்திரங்களில் உணவைச் சமைத்து இறைவனுக்கு நிவேதனமாக்கல்
   - ௐ திருவிளக்கேற்றி தூபமிட்டு இறைவனை வழிபாடு செய்தல்
   - ௐ இறைவனுக்கு படையல் இட்டு நிவேதனமாக்கிய உணவை ஏழை எளியவர்களுக்குப் பகிர்ந்தளித்து உறவினர் சூழ உண்ணல்.

6. சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டவர்கள் யாவர்?
   - ௐ சைவர்கள்

7. திருவிளக்கில் எத்தனை சுடர்கள் இருப்பது சிறந்ததாகும்?
   - ௐ ஐந்து சுடர்கள்

8. தோத்திரங்களை ஓதும் போது முதலிலும் ஓதிய பின்பு இறுதியிலும் சொல்லப்படுவது எது?
   திருச்சிற்றம்பலம்

9. நற்குணங்கள் எவை?
   - ௐ அன்பு, பொறுமை, பக்தி, விட்டு கொடுக்கும் மனப்பாங்கு

10. பண்டிகைகள் சில தருக
    - ௐ தைப்பொங்கல்
    - ௐ புதுவருடப்பிறப்பு
    - ௐ தீபாவளி

11. விரதங்கள் சில தருக?
    - ௐ நவராத்திரி
    - ௐ சிவராத்திரி
    - ௐ விநாயக சதுர்த்தி

12. மங்களச்சடங்குகள் எவை?
    - ௐ பெயர் சூட்டுதல்
    - ௐ ஏடு தொடங்குதல்
    - ௐ திருமணச் சடங்கு

13. சைவ இல்லங்களில் பயன்படுத்தப்படும் விளக்குகள் எவற்றாலானவை?
    - ௐ பித்தளை
    - ௐ செம்பு
    - ௐ வெள்ளி
    - ௐ மண் விளக்கு

## 03. நாளாந்த செயன்முறைகள்

1. சரியாயின் ( ) எனவும், பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுக.

    1) மானிடப் பிறவியை எமக்களித்தவர் பரம்பொருளாகிய சிவபெருமான் ஆவார் ( )

    2) இறைவனை நினைப்பதற்குரிய ஏற்ற வழிமுறைகளை நம்முன்னோர்கள் ஒழுங்குபடுத்தவில்லை (×)

    3) விபூதி, உருத்திராக்கம் என்பன சிவசின்னங்களாகும் ( )

    4) திருநீற்றை தெற்குமுகமாக இருந்து தரித்தல் வேண்டும் ( × )

    5) நமக்காக இறைவனிடம் பிரார்த்திப்பதைப்போல் பிறருக்காகவும் பிரார்த்தித்தல் வேண்டும்( )

2. "அரிது அரிது மானுடராதல் அரிது" என்று கூறியவர் யார்?
    ௐ ஔவையார்

3. திருநீற்றைத் தரிக்கும் முறைகள் எவை?
    ௐ உத்தூளனம்
    ௐ திரிபுண்டரம்

4. திருநீறு அணியும் உத்தம திக்குகள் எவை?
    ௐ வடக்கு முகமாகவோ அல்லது கிழக்கு முகமாகவோ இருந்து கொண்டு தரித்தல்

5. நாம் உணவு உண்ணத் தொடங்கும் முன்பு பாடவேண்டிய தேவாரம் எது?
    ௐ "அன்னம் பாலிக்கும்…"

6. நாம் தினந்தோறும் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய நற்பண்புகள் எவை?
    ௐ கடவுளைத்தியானித்தல், புனிதம் பேணல், சிவ சின்னங்களை தரித்தல், கடவுளையும் பெற்றோரையும் வழிபடுதல், ஏழைகளுக்கு உதவுதல்.

## 04. சமூகம் சார்ந்த சமய விழுமியங்கள்

(அ) உண்மை பேசுவோம்

1. 'உண்மை' என்பதற்கு வேறு பெயர் தருக?
   - ௐ மெய்ம்மை
   - ௐ வாய்மை
   - ௐ சத்தியம்

2. முருகனிடம் காணப்பட்ட இரண்டு நல்ல பண்புகளைத் தருக?
   - ௐ உண்மை பேசியமை.
   - ௐ நேர்மையாக நடந்து கொள்கின்றமை

3. உண்மை பேசியதால் முருகனுக்குக் கிடைத்த நன்மைகள் இரண்டினை எழுதுக?
   - ௐ வியாபாரத்தில் வளர்ச்சியடைந்தமை
   - ௐ வாடிக்கையாளரிடம் நன்மதிப்பைப் பெற்றமை

4. பொய் பேசியதால் கிருஷ்ணனுக்கு ஏற்பட்ட நட்டம் யாது?
   - ௐ முதியவர் அவரது கடையில் பொருட்களை வாங்கவில்லை

✣ இடைவெளிகளை நிரப்புக.

| நல்ல, உத்தமராக, உண்மை, பொய் |
|---|

1. சமய விழுமியப் பண்புகளில் உண்மை பேசுதலும் ஒன்றாகும்.
2. 'பொய் சொல்வதைப் பார்க்கிலும் இது நல்லது ஐயா' என்று முருகன் சொன்னான்.
3. முருகனிடம் நல்ல பொருள் வாங்கலாம் என்று பெரிய மனிதர் கண்டு கொண்டார்.
4. உண்மை பேசி உத்தமராக வாழ்வோம்.

(ஆ) பெரியோரைக் கனம் பண்ணுதல்

1. பெரியோர் எனக் குறிப்பிடப்படுபவர்கள் யாவர்?
   - ௐ பெற்றோர்
   - ௐ குரு
   - ௐ வயதில் மூத்தோர்

2. நீங்கள் உங்கள் வீட்டிலுள்ள பெரியோர்களுக்கு எவ்வாறான உதவிகளைச் செய்கின்றீர்கள்?
   - ௐ தினமும் வீட்டை சுத்தம் செய்தல்
   - ௐ உணவு உண்ட பாத்திரத்தை கழுவி வைத்தல்

3. "குரு" என அழைக்கப்படுபவர் யார்?
   - ௐ ஆசிரியர்
   - ௐ ஆலயத்திலுள்ள சமய மத குரு

4. பெரியோர் முன்னால், தவிர்க்க வேண்டிய செயல்கள் மூன்றினைக் குறிப்பிடுக?
   - ௐ உயர்ந்த ஆசனத்தில் இருத்தல்
   - ௐ காலை நீட்டிக் கொண்டிருத்தல்
   - ௐ கால்மேல் கால் போட்டுக் கொண்டிருத்தல்
   - ௐ எதிர்த்துப் பேசுதல்
   - ௐ கை காட்டிப் பேசுதல்

✣ இடைவெளிகளை நிரப்புக.

| எழுந்து நின்று, கனம் பண்ணுதல், ஆசீர்வாதம், மதிப்பு, சமயகுரு |
|---|

1. சமய விழுமியப் பண்புகளில் பெரியோரைக் கனம் பண்ணுதல் சிறந்த பண்பாகும்
2. வீட்டிலுள்ள பெரியவர்களுக்கு மதிப்பு அளிக்க வேண்டும்
3. ஆசிரியர் வகுப்பறைக்குள் வரும்போது எழுந்த நின்று வணக்கம் செலுத்துதல் வேண்டும்
4. நமது ஆலயங்களிலுள்ள சமய குரு மதிப்பளிக்க வேண்டியவராவர்
5. பண்டிகை நாளில் பெரியோரை வணங்கி,அவர்களுடைய ஆசிர்வாதம் பெற வேண்டும்

(இ) நன்றி மறவாமை

1. இந்தக் கதை யாரால் கூறப்பட்டது?
   ௐ வியாசரால்
2. இந்தக் கதையில் வரும் கதாபாத்திரங்கள் எவை?
   ௐ தேவேந்திரன், கிளி
3. தேவர்களின் அரசன் யார்?
   ௐ தேவேந்திரன்
4. கிளி இந்திரனிடம் கேட்ட வரம் என்ன?
   ௐ ‘தேவர்குல வேந்தே எனக்கு நீங்கள் வரம் தருவதாக இருந்தால் பட்டுப்போன இந்த மரம் பழையபடி பூத்துக்குலுங்கும் வளமான மரமாக மாற வேண்டும்.’’
5. கிளியிடம் உமக்குப் பிடித்த பண்புகளை எழுதுக?
   ௐ நன்றி மறக்காமை
   ௐ சுயநலம் இல்லாமை

(ஈ) தருமம்

1. மதங்கள் பிரதானமாக வலியுறுத்தும் விடயம் யாது?
   ௐ தருமம்
2. அறம் செய விரும்பு என்னும் மனவாக்கியம் யாரால் கூறப்பட்டது?
   ௐ ஔவையார்
3. தர்மபுத்திரன் செய்த யாகத்தின் பெயர் என்ன?
   ௐ அஸ்வமேத யாகம்
4. கீரியின் உடம்பில் நிகழ்ந்த மாற்றம் என்ன?
   ௐ பாதி உடல் தங்கமாக மாறியது
5. கிரி கூறிய விடயத்தைச் சுருக்கமான கதையாக எழுதுக?
   ௐ வறுமையுற்ற போதும் எங்களாலான தருமச் செயல்களை பிறர் நலத்திற்காகச் செய்ய வேண்டும்

## 05. வாழ்வியல் சடங்குகள்

1. வாழ்வியல் சடங்குகளை மேற்கொள்வதன் நோக்கம் யாது?
   ॐ மனித வாழ்க்கையை அர்த்தத்துடனும் நெறிமுறை தவறாதும் வாழ வேண்டும் என்ற கருத்தில் மனித வாழ்வில் ஒவ்வொரு கட்டத்திலும் மேற்கொள்ளப்படுகின்றது.

2. வாழ்வியல் சடங்குகள் மூன்றின் பெயர்களை எழுதுக.
   ॐ பெயர் சூட்டுதல்
   ॐ காது குத்துதல்
   ॐ சோறூட்டல்
   ॐ ஏடு தொடக்குதல்

3. காது குத்தும் சடங்கினை வேறு எவ்வாறு அழைக்கலாம்?
   ॐ கர்ண வேதனம்

4. சோறூட்டும் சடங்கின் முக்கிய நோக்கம் யாது?
   ॐ குழந்தை எக்காலத்திற்கும் உணவுக்குக் குறைவில்லாமலும் சுக தேகியாக வாழவும் இறைவணை வேண்டிப் பிரார்த்தித்தல் சோறூட்டல் சடங்கின் முக்கிய நோக்கமாகும்.

5. சோறூட்டல் வேறு எவ்வாறு அழைக்கப்படும்
   ॐ அன்னப் பிராசனம்

6. ஏடு தொடக்குதல் வேறு எப்பெயரால் அழைக்கப்படும்?
   ॐ வித்தியாரம்பம்

7. வாழ்வியற் சடங்குளின் இரு பெரும் பிரிவுகள் எவை?
   ॐ மங்கலச் சடங்குகள்
   ॐ அமங்கலச் சடங்குகள்

## 06. விரதங்களும் பண்டிகைகளும்

1. விரதம் என்றால் என்ன?
   - ௐ "விரதமானது மனம் பொறிவழிப் போகாது நிற்றப்பொருட்டு, உணவை விடுத்தோனும், சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம், என்னும் மூன்றினாலும் கடவுளை மெய்யன்போடு விசேடமாக வழிபடல்" விரதமாகும்.

2. சிவ விரதங்கள் மூன்றினைக் குறிப்பிடுக?
   - ௐ சிவராத்திரி
   - ௐ திருவாதிரை
   - ௐ பிரதோ'ம்
   - ௐ கேதார கௌரி விரதம்

3. விரதங்களை அனுஸ்டிக்கும் போது, கடைப்பிடிக்க வேண்டிய பொதுவான நியதிகள் சில தருக?
   - ௐ அதிகாலையில் நித்திரை விட்டெழுதல்
   - ௐ புறத்தூய்மை, அகத்தூய்மை பேணல்
   - ௐ தோய்த்து உலர்ந்த ஆடை அணிதல்.
   - ௐ ஆலயத்திற்குச் சென்று பக்தியுடன் இறைவனை வழிபடுதல்
   - ௐ திருமுறை ஓதுதல்
   - ௐ உணவைச் சுருக்குதல்

4. பண்டிகை என்றால் என்ன?
   - ௐ பண்டிகை என்பது சமயம் சார்ந்ததும், வாழ்வியல் சார்ந்ததும் வருடந்தோறும் குறிப்பிட்ட நாளில் விருந்துடன் கொண்டாடப்படுவது ஆகும்.

5. நாம் கொண்டாடும் பண்டிகைகள் மூன்றின் பெயரை எழுதுக?
   - ௐ தைப்பொங்கல்
   - ௐ சித்திரை வருடப்பிறப்பு
   - ௐ தீபாவளி

6. தீபாவளிப் பண்டிகை எப்போது கொண்டாடப்படுகின்றது?
   - ௐ ஐப்பசி மாதத்தில் வரும் கிருஷ்ணபட்சத்துத் சதுர்த்தசி தினத்தில் ஆகும்

# 07.திருமுறைத் தொகுப்பு

1. நம்பி அவரித்த ஊரின் பெயர் என்ன?
   ॐ திருநாரையூர்

2. நம்பி மனம் வருந்தி தமது தலையினைக் கல்லிலே மோதச் சென்றமைக்கான காரணம் யாது?
   ॐ நம்பியாண்டார் நம்பி திருவமுதை பொள்ளாப் பிள்ளையார் செய்யாதிருப்பதைக் கண்ட மிகவும் மனம் வருந்தியமையால் ஆகும்.

3. தேவாரப்பாடல்கள் எந்த ஆலயத்தில் இருந்தன?
   ॐ தில்லைச் சிற்றம்பலம் / சிதம்பரம்

4. மாணிக்கவாசகரின் 2 நூல்களும் எவை?
   ॐ திருவாசகம் , திருக்கோவையார்

5. பன்னிரு திருமுறைகளை அட்டவணைப்படுத்துக.

| எண் | திருமுறையின் பெயர் | திருமுறை ஆசிரியர் | ஆசிரியர் தொகை |
|---|---|---|---|
| 1,2,3 | தேவாரம் | திருஞானசம்பந்தர் | 1 |
| 4,5,6 | தேவாரம் | திருநாவுக்கரசர் | 1 |
| 7 | தேவாரம் | சுந்தரர் | 1 |
| 8 | திருவாசகம்<br>திருக்கோவையார் | மாணிக்கவாசகர் | 1 |
| 9 | திருவிசைப்பா | திருமாளிகைத்தேவர்,<br>சேந்தனார்,கருவூர்த் தேவர்,<br>நம்பிகாடநம்பி,<br>கண்டராதித்தர்,வேணாட்டடிகள்,<br>திருவாலியமுதனார்,<br>புருடோத்தநம்பி, சேதிராயர் | 9 |
| | திருப்பல்லாண்டு | சேந்தனர் | |
| 10 | திருமந்திரம் | திருமூலர் | 1 |
| 11 | 40 பிரபந்தம்<br>(பிரபந்த மாலை) | திருவாலவாயுடையார்,<br>காரைக்காலம்மையார்,<br>ஐயடிகள் காடவர்கோன்,<br>சேரமான் பெருமாள்,<br>நக்கீர தேவர்,கல்லாட தேவர்,<br>கபில தேவர்,பரண தேவர்,<br>இளம்பெருமானடிகள்,<br>அதிராவடிகள்,பட்டினத்து அடிகள்,<br>நம்பியாண்டார் நம்பி. | 12 |
| 12 | பெரியபுராணம் | சேக்கிழார் | 1 |
| | | | 27பேர் |

## 08. இளையான் குடிமாற நாயனார்

1. மாற நாயனார் ஆற்றிய பணி யாது?
   ௐ சிவனடியார்களுக்கு அமுதூட்டும் பணியைக் புரிந்து வந்தார்.

2. மாறனார் இல்லத்தில் சிவனடியார் வேடம் பூண்டு வந்தவர் யார்?
   ௐ சிவபெருமான்

3. சிவன் மாறனாரின் செல்வத்தைப் படிப்படியாக் குறையச் செய்ததன் காரணம் யாது?
   ௐ செல்வம் தேய்ந்து வறுமை நிலை வந்தாலும் அடியார்க்கு அமுது படைக்கும் தொண்டை இறுதி வரை செய்யும் மன உறுதி உடையவர் என்பதை உலகிற்கு எடுத்துக் காட்டுவதற்காகவாகும்

4. இறைவனின் திருவருள் எப்போது கிடைக்கும்?
   ௐ நாம் இறைவன் மீது நம்பிக்கையும், பக்தியும் கொண்டால் இறைவனின் திருவருள் நிச்சயம் கிடைக்கும்

5. அழகாபுரிக்குத் தலைவன் யார்?
   ௐ குபேரன்

6. இறைவன் இடப வாகனத்தில் தோன்றி மாறனாரிடம் யாது கூறினார்?
   ௐ "அடியார்க்கு அமுதூட்டும் அரும்பணியைச் செய்த நீயும் மனைவியும் நம் சிவலோகத்தில் இன்புற்று வாழ்வீர்களாக" என்றார்.

## 09. பஞ்ச புராணம்

அ

1. பஞ்சபுராணத்தில் அடங்கும் நூல்கள் யாவை?
   - ௐ தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா ,திருப்பல்லாண்டு ,பெரியபுராணம்
2. பஞ்சபுராணம் ஓதப்படும் சந்தர்ப்பங்கள் 2 தருக?
   - ௐ வீட்டில் காலை ,மாலை வழிபாடுகளின் போது
   - ௐ பாடசாலைகளில் காலைப்பிராத்தனையின் போது
   - ௐ விழாக்கள் நடைபெறும் போது
3. “திருச்சிற்றம்பலம்” சொல்லும் சந்தர்ப்பங்கள் யாவை?
   - ௐ பஞ்சபுராணம் ஓதமுன்பும் ஓதிய பின்பும்
4. பஞ்சபுராணத்தை ஓதுவதால் நாம் அடையும் நன்மைகள் யாவை?
   - ௐ மன நிம்மதி
   - ௐ இறைபக்தி
   - ௐ ஆன்மீக உணர்வு

ஆ

1. தாண்டக வேந்தர் எனும் சிறப்புப் பெயர் பெற்றவர் யார்?
   - ௐ திருநாவுக்கரச நாயனார்
2. திருமணக்கோலத்தில் சிவனால் ஆட்கொள்ளப்பட்ட நாயனார் யார்?
   - ௐ சுந்திரமூர்த்தி நாயனார்
3. மாணிக்கவாசக சுவாமிகளால் அருளப் பெற்ற பாடல்கள் யாவை?
   - ௐ திருவாசகம்
   - ௐ திருக்கோவையார்
4. திருவிசைப்பா என்பதன் பொருள் யாது?
   - ௐ திருவிசைப்பா என்பது இறைவனின் பெருமையைப் பாடுகின்ற தெய்வத்தன்மை பொருந்திய இசைப்பாடல் எனப் பொருள்படும்.
5. திருத்தொண்டர் புராணம் எனச் சிறப்பிக்கப்படும் நூல் யாது?
   - ௐ பெரிய புராணம்
6. சைவத்திருமுறைகளுள் 12 ஆவதாக இடம் பெறும் நூல் எது? அதன் ஆசிரியர் யார்?
   - ௐ பெரியபுராணம்
   - ௐ சேக்கிழார்
7. அட்டவணையைப் பூர்த்தி செய்க

| பாடல் முதலடி | பாடியவர் | நூலின் பெயர் | தலம் | பண் |
|---|---|---|---|---|
| இடரினும் தளரினும் | சம்பந்தர் | தேவாரம் | திருவாவடுதுறை | காந்தாரபஞ்சமம் |
| ஓசையொலியெல்லாம்… | அப்பர் | தேவாரம் | திருவையாறு | தாண்டகம் |
| பித்தா பிறை.. | சுந்தார் | தேவாரம் | திருவெண்ணெய் நல்லூர் | இந்தளம் |
| பூசுவதும்… | மாணிக்கவாசகர் | திருவாசகம் | தில்லை | - |
| ஒளிவளர்… | திருமாளிகைத்தேவர் | திருவிசைப்பா | தில்லை(கோவில்) | பஞ்சமம் |
| சீரும் திருவும் | சேந்தனர் | திருப்பல்லாண்டு | தில்லை | பஞ்சமம் |
| உலகெலாம்… | சேக்கிழார் | பெரியபுராாணம் | தில்லை | - |

இ

1. தோத்திரப்பாடல்கள் என்றால் என்ன?
   - ௐ சைவத்திருமுறைகள் தொகுக்கப்பட்டதன் பின்பு பாடப்பட்ட பாடல்கள் தோத்திரப் பாடல்கள் எனப்படும்.

2. தோத்திரப்பாடல்களுள் அடங்கும் 3 நூல்களின் பெயர்களைக் குறிப்பிடுக?
   - ௐ தோத்திரப்பாடல்களில் திருப்புகழ், கந்தரனுபூதி, கந்தரலங்காரம், அபிராமி அந்தாதி, சகலகலா வல்லிமாலை

3. திருப்புகழை அருளியவர் யார்?
   - ௐ அருணகிரி நாதர்

4. திருப்புகழின் சிறப்புகள் 3 தருக?
   - ௐ இனிய சந்தம்
   - ௐ ஓசை நயம்
   - ௐ கருத்துச் செறிவு
   - ௐ தாளச்சிறப்பு

5. திருவிசைப்பா பாடியோர் யாவர்?
   - ௐ திருமாளிகைத்தேவர் தொடக்கம் சேதிராயர் வரையிலான 9 பேர்

6. கோயில் என அழைக்கப்படும் தலம் எது?
   - ௐ தில்லைச் சிதம்பரம்

7. திருப்பல்லாண்டு பாடியவர் யார்?
   - ௐ சேந்தனார்

8. பெரியபுராணம் யாரால் பாடப்பட்டது?
   - ௐ சேக்கிழாரால்

9. 12ம் திருமுறையாகக் கருதப்படுவது எது?
   - ௐ பெரியபுராணம்

10. பெரிய புராணத்திற்கு அடியெடுத்துக் கொடுத்தவர் யார்? அதன் அடியை எழுதுக?
    - ௐ சிவபெருமான்
    - ௐ "உலகெல்லாம் உணர்ந்து…."

## 10. ஆலய வழிபாடு

1. ஆலயம் என்பதன் பொருள் யாது?
   - ௐ ஆன்மா லயப்படும் இடமாக ஆலயம் விளங்குகின்றது

2. ஆலயத்திற்கு கொண்டு செல்லப்படும் பொருட்கள் எவை?
   - ௐ பழம், பாக்கு, வெற்றிலை, கற்பூரம், தேங்காய், பால், இளநீர், பூக்கள்

3. ஆலயத்தில் செய்யப்படும் நமஸ்காரங்களைக் குறிப்பிடுக?
   - ௐ அட்டாங்க நமஸ்காரம்
   - ௐ பஞ்சாங்க நமஸ்காரம்

4. ஆலயத்தில் நீங்கள் செய்யும் தொண்டுகள் 5 தருக?
   - ௐ கோயிலைக் கூட்டுதல்
   - ௐ கோயிலைக் கழுவுதல்
   - ௐ பாத்திரங்கள், விளக்குகள் என்பவற்றை விளக்குதல்
   - ௐ சாமரை வீசுதல்
   - ௐ மாலை கட்டுதல்

5. ஆலய வழிபாட்டின் நன்மைகள் 3 தருக?
   - ௐ எமது மனம் அமைதி பெறும்
   - ௐ வாழ்வு வளம் பெறும்
   - ௐ ஆன்மா ஈடேற்றமடையும்

6. ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெரும் ஜோதியாக விளக்குபவர் யார்?
   - ௐ இறைவன்

7. ஆலயத்திற்குச் செல்லக்கூடிய நாட்கள் எவை?
   - ௐ செவ்வாய்
   - ௐ வெள்ளி
   - ௐ மாதப்பிறப்பு
   - ௐ வருடப்பிறப்பு
   - ௐ தைப்பொங்கல்

8. ஆலயத்திற்கு எவ்வாறு செல்ல வேண்டும்?
   - ௐ நீராடி தோய்த்துலர்ந்த ஆடையணிந்து விபூதி தரித்து தூய்மையுடன் செல்ல வேண்டும்

9. ஆண்கள் செய்யும் நமஸ்காரம் எது?
   - ௐ அட்டாங்க நமஸ்காரம்

10. பெண்கள் செய்யும் நமஸ்காரம் எது?
    - ௐ பஞ்சாங்க நமஸ்காரம்

11. சிவதரிசன பலனைத் தருபவர் யார்?
    - ௐ சண்டேஸ்வரர்

12. ஆலயத்தின் முக்கியத்துவம் குறித்து எமது முன்னோர்கள் கூறிய கூற்றுக்கள் யாவை?
    - ௐ ‘‘கோயில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்.’’
    - ௐ ‘‘ஆலயம் தொழுவது சாலவும் நன்று’’

13. ஐம்பொறிகள் எவை?
ௐ மெய், வாய், கண், மூக்கு, செவி

✠ கீழே தரப்பட்ட சொற்களை வைத்து வெற்றிடம் நிரப்புக.
(ஆலயம், பூசைப்பொருட்கள், விநாயகர், சண்டேசுவரர், திருமுறைப்பாடல்கள்)

1. ஆன்மா லயப்படும் இடம் ஆலயம் ஆகும்
2. சுவாமி சந்நிதியில் திருமுறைப்பாடல்கள் ஓதல் வேண்டும்.
3. ஆலய வழிபாட்டில் முதலில் வழிபடும் தெய்வம் விநாயகர் ஆவார்
4. ஆலய வழிபாட்டில் இறுதியான வழிபடும் தெய்வம் சண்டேசுவரர் ஆவார்
5. பழம், பாக்கு, வெற்றிலை, கர்ப்பூரம், தேங்காய், என்பன பூசைப்பொருட்கள் என அழைக்கப்படுகின்றன.

## 11. சமய குரவர் நால்வர்

1. சைவசமய குரவர்கள் என அழைக்கப்படுபவர்கள் யாவர்?
   - ௐ திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்
   - ௐ திருநாவுக்கரசு நாயனார்
   - ௐ சுந்தர மூர்த்தி நாயனார்
   - ௐ மாணிக்கவாசகர்

2. சிவனைக்குறித்து அநேக பாடல்களைப்பாடி பல அற்புதங்களைச் செய்து சைவசமயமே மெய்ச் சமயம் என நிலைநிறுத்தியவர்கள் யாவர்?
   - ௐ சைவசமய குரவர்கள்

### (அ) திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

1. திருஞானசம்பந்தர் பிறந்த இடம் எது?
   - ௐ சோழ நாட்டின் சீர்காழி எனும் இடத்தில்

2. சம்பந்தரின் தாய்,தந்தையாரின் பெயர் என்ன?
   - ௐ தாய்-பகவதி அம்மையார்
   - ௐ தந்தை- சிவபாத விருதயர்

3. தமது தந்தை குளத்தில் நீராடும் போது நீரில் மூழ்கிய தந்தையைக் காணாது ஏங்கி அழத பிள்ளைக்கு ஞானப்பால் கொடுத்தவர் யார்?
   - ௐ உமாதேவியார்

4. திருஞானசம்பந்தர் பாடிய முதலாவது தோவாரம் எது?
   - ௐ ''தோடுடைய செவியன்''

5. எத்தனை வயதில் அப்பதிகத்தைப் பாடினார்?
   - ௐ 3வது வயதில்

6. சம்பந்தரின் மறுபெயர்கள் எவை?
   - ௐ ஆளுடைய பிள்ளையார்
   - ௐ பாலறாவாயர்,
   - ௐ பரசமய கோளரி

7. சம்பந்தர் செய்த அற்புதங்கள் எவை?
   - ௐ சிவபெருமானிடம் பொற்றாளம், முத்துக்குடை, முத்துச் சின்னம், முத்துப் பந்தர் பெற்றார்
   - ௐ படிகாசு பெற்று பஞ்சம் தீர்த்தல்
   - ௐ திருமறைக்காடு என அழைக்கப்படும் வேதாரணியத்தில் வேதங்களினாலே பூட்டப்பட்டுத் திருநாவுக்கரசு நாயனாராற் திறக்கப்பட்ட திருக்கதவை அடைக்கச் செய்தார்.
   - ௐ பாண்டிய மன்னனின் நோயை நீக்கி, அவரை சைவனாக்கினார்.

8. சம்பந்தரின் குருபூசைத் தினம் எது
   - ௐ வைகாசி மூலம்

### (ஆ) திருநாவுக்கரசு நாயனார்

1. திருநாவுக்கரசு நாயனார் பிறந்த இடம் எது?
   - ௐ திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூரில் பிறந்தார்

2. திருநாவுக்கரசு நாயனாரின் தாய், தந்தையாரின் பெயர் என்ன?
   - ௐ தாய் - மாதினியார்
   - ௐ தந்தை – புகழனார்

3. திருநாவுக்கரசு நாயனாரின் பிள்ளைத் திருநாமம் எது?
   - ௐ மருணீக்கியார்

4. திருநாவுக்கரசு நாயனார் சமண சமயத்திற்கு மாறிய பின்பு சமணர்கள் அவருக்கு இட்ட பெயர் என்ன?
   - ௐ தருமசேனர்

5. திருநாவுக்கரசரின் தமக்கையாரின் பெயர் என்ன?
   - ௐ திலகவதியார்

6. திருநாவுக்கரசர் பாடிய முதல் தேவாரம் என்ன?
   - ௐ “கூற்றாயினவாறு…”

7. அப்பருக்கு “நாவுக்கரசு” எனும் பெயர் சூட்டியவர் யார்?
   - ௐ சிவபெருமான்

8. அப்பரின் மறுபெயர்கள் எவை?
   - ௐ நாவுக்கரசு
   - ௐ ஆளுடைய அரசு
   - ௐ உழவாரப் படையாளி

9. நாவுக்கரசரின் அற்புதங்கள் எவை?
   - ௐ சமணர்களாலே 7 நாட்கள் சுண்ணாம்பு அறையில் அடைக்கப்பட்டிருந்தும் வேகாது பிழைத்தமை
   - ௐ சமணர்கள் கொடுத்த நஞ்சு கலந்த பாற்சோற்றை உண்டும் சாகாது பிழைத்தமை.
   - ௐ கொல்ல வந்த யானை அவரை வணங்கிச் சென்றமை
   - ௐ கல்லுடன் கட்டி கடலில் விட்டபோது கல் தெப்பமாக மிதந்தமை.
   - ௐ சம்பந்தருடன் சேர்ந்து படிக்காசு பெற்று பஞ்சம் தீர்த்தல்
   - ௐ திருமுறைக் காட்டுக் கோயில் திறக்கப்பாடியமை

10. திருநாவுக்கரசு நாயனாரின் குருபூசைத் தினம் எது
   - ௐ சித்திரை சதயம்

(இ) சுந்தரமூர்த்தி நாயனார்

1. சுந்தரர் பிறந்த இடம் எது
   - ௐ திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூரில் பிறந்தார்

2. சுந்தரரின் தாய்,தந்தையாரின் பெயர் என்ன?
   - ௐ தாய் - இசைஞானியார்
   - ௐ தந்தை – சடையனார்

3. சுந்தரரின் பிள்ளைத்திரு நாமம் எது?
   - ௐ நம்பியாரூரர்

4. புத்தூர் சடங்கவி சிவாச்சாரியாரின் மகளை யாருக்குத் திருமணம் செய்ய ஏற்பாடயிருந்தது.?
   - ௐ சுந்தரருக்கு

5. சுந்தரரின் திருமணக்கோலத்தில் கிழப்பிராமணர் வடிவில் வந்து தடுத்தாட் கொண்டவர் யார்?
   - ௐ சிவபெருமான்

6. சுந்தரர் கிழப்பிராமணரை எவ்வாறு இகழ்ந்தார்?
   - ௐ பித்தன்

7. சுந்தரர் பாடிய முதல் தேவாரம் எது
   - ௐ "பித்தா பிறை சூடீ…"

8. சுந்தரர் செய்த அற்புதங்கள் எவை?
   - ௐ செங்கற்களைப் பொன்னாகப் பெற்றுக் கொடுத்தமை
   - ௐ ஆற்றில் இட்ட பொன்னைக் குளத்தில் எடுத்தமை
   - ௐ முதலை உண்ட பிள்ளையை மீட்டமை

9. சுந்தரரின் மறுபெயர்கள் எவை?
   - ௐ வன்றொண்டர்
   - ௐ ஆலால சுந்தரர்
   - ௐ தம்பிரான் தோழர்

10. சுந்தரரின் குருபூசை தினம் எது
   - ௐ ஆடிச்சுவாதி

(ஈ) மாணிக்கவாசக சுவாமி

1. மாணிக்கவாசகர் பிறந்த இடம் எது?
   - ௐ பாண்டிய நாட்டில் திருவாதவூர்

2. மாணிக்கவாசகர் தாய்,தந்தையாரின் பெயர் என்ன?
   - ௐ தாய் -சிவஞானவதியார்
   - ௐ தந்தை – சம்புபாதாசிரியர்

3. மாணிக்கவாசகர் பிள்ளைத்திரு நாமம் எது?
   - ௐ திருவாதவூரர்

4. பாண்டிய மன்னனுடைய முதலமைச்சராகப் பணிபுரிந்தவர் யார்?
   - ௐ மாணிக்கவாசகர்

5. திருவாதவூரருக்கு மாணிக்கவாசகர் எனப் பெயர் சூட்டியவர் யார்?
   - ௐ சிவபெருமான்

6. மாணிக்கவாசகர் செய்த அற்புதங்கள் எவை?
   - ௐ ஊமைப் பெண்ணைப் பேச வைத்தார்
   - ௐ இறைவன் அடியவராக வந்து அவருடைய திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் கேட்டு எழுதும் பேறு பெற்றார்
   - ௐ திருவாதவூரர் , ஈற்றில் எல்லோரும் காண கனகசபையுட் புகுந்து ,இறைவனுடன் இரண்டறக் கலந்தார்

7. மாணிக்கவாசகரின் குருபூசை தினம் எது?
   - ௐ ஆனி மகம்

## 12. ஞானப்பிரகாச முனிவர்

1. ஞானப்பிரகாச முனிவரிடம் காணப்பட்ட நற்பண்புகள் 2 தருக?
   - ௐ உயிர்களிடம் இரக்கம் காட்டுதல்
   - ௐ சைவப் பாரம்பரியத்தைப் பேணிக்காத்தமை

2. அவர் யாழ்ப்பாணத்தை விட்டு, தமிழகம் சென்றதற்கான காரணம் யாது?
   - ௐ உயிர்களிடம் கொண்ட இரக்கத்தால் பசுவதைக்கு அஞ்சி, தமிழகம் சென்றார்.

3. ஞானப்பிரகாச முனிவர் சிதம்பரத்தில் செய்த பணிகள் 2 தருக?
   - ௐ ஞானப்பிரகாசம் என்னும் குளத்தைத் தாபித்தார்
   - ௐ மடம் ஒன்றைத் தாபித்தார்

4. ஞானப்பிரகாச முனிவர் சைவத்துக்கு ஆற்றிய பணிகள் 2 தருக?
   - ௐ சமய நூல்களுக்கு உரை எழுதியமை
     (உ-ம்) சிவஞான சித்தியார் சுபக்கதிற்குத் தமிழில் எழுதிய உரை சிறப்பு வாய்ந்தது.
   - ௐ வடமொழியில் சித்தாந்த சிகாமணி, பிராமண தீபிகை, பிரசாத தீபிகை முதலான நூல்களையும் பௌட்கராகம் விருத்தி,சிவஞானபோத விருத்தி முதலிய உரை நூல்களை எழுதினார்.

5. ஞானப்பிரகாச முனிவர் எங்கே? எப்போது பிறந்தார்?
   - ௐ யாழ்பாணத்திலுள்ள திருநெல்வேலி கி.பி 1625 ம் ஆண்டு

6. ஞானப்பிரகாசருடைய தந்தையார் யார்?
   - ௐ காரளப்பிள்ளை

7. ஞானப்பிரகாசர் எப்போது இறைபதமடைந்தார்?
   - ௐ கி.பி. 1658ம் ஆண்டு பங்குனி மாத பூசத்தில்

## 13. முப்பொருள்

1. முப்பொருள்களும் யாவை?
   - ௐ பதி, பசு, பாசம்

2. அவற்றை வேறு எப்பெயர்களால் அழைக்கலாம்?
   - ௐ பதி - இறை
   - ௐ பசு – உயிர்
   - ௐ பாசம் - தளை

3. பதியின் மூவகைத் திருமேனிகளும் எவை?
   - ௐ அருவம்
   - ௐ உருவம்
   - ௐ அருவுருவம்

4. பசு என்ற சொல்லின் பொருள் யாது?
   - ௐ பாசத்தால் கட்டுண்டது

5. மும்மலங்களும் யாவை?
   - ௐ ஆணவம், கன்மம், மாயை

6. பதியின் மறுபெயர்கள் யாவை?
   - ௐ இறை, கடவுள், சிவம், முதல்வன், பரமசிவன்

7. பதியின் இயல்புகள் சில தருக?
   - ௐ என்றும் உள்ளவர்
   - ௐ எங்கும் உள்ளவர்
   - ௐ எல்லாம் அறிபவர்
   - ௐ எல்லாம் வல்லவர்
   - ௐ விருப்பு வெறுப்பு இல்லாதவர்

8. பதியின் இரு இலக்கணங்களும் எவை?
   - சொரூபலக்கணம்
   - தடத்தலக்கணம்

9. பசு என்பதன் வேறு பெயர்கள் எவை?
   - ௐ உயிர், ஆன்மா, சிவன்

10. பாசம் என்பதன் வேறு பெயர்கள் எவை?
    - ௐ மலம், தளை

# 14. நாட்டார் வழிபாடு

1. சிறுதெய்வங்களுக்குரிய ஏனைய பெயர்கள் எவை?
   - ௐ நாட்டார் தெய்வம்
   - ௐ குல தெய்வம்
   - ௐ சிறு தெய்வம்
   - ௐ ஊர்த் தெய்வம்
   - ௐ காவல் தெய்வம்
   - ௐ கிராமியத் தெய்வம்

2. கிராமியத்தெய்வங்கள் எவற்றின் பொருட்டு வழிபடப்படுகின்றனர்?
   - ௐ நாட்டார் மக்களின் நம்பிக்கை அடிப்படையிலும், அவர்கள் முன்னோர்கள் கற்றுத்தந்த முறைப்படியும் நடக்கின்றது,

3. சிறுதெய்வங்களின் கோயில்கள் எவ்வாறான இடங்களில் அமைந்து காணப்படும்?
   - ௐ மரத்தடி, வயல், குளம், ஏரி, ஆறு

4. கிராமிய வழிபாட்டில் பூசை நிகழ்த்துபவர் எப் பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றார்?
   - ௐ பூசாரிமார்
   - ௐ கட்டாடிமார்
   - ௐ கப்புகனார்
   - ௐ திருநீற்று ஆண்டிகள்

5. கிராமிய வழிபாட்டில் இடம் பெறும் ஆண் கடவுளர் யாவர்?
   - ௐ வைரவர், ஐயனார், வதனமார், அண்ணமார், பெரியதம்பிரான், மதுரைவீரன்

6. கிராமிய வழிபாட்டில் இடம் பெறும் பெண் கடவுளர் யாவர்?
   - ௐ அம்மன், காளி, மாரி, பேச்சி

7. கிராமிய வழிபாட்டு முறைகள் எவை?
   - ௐ தெய்வங்களை அலங்கரித்தல், படையல்போடுதல், நேர்த்திக்கடன் செலுத்துதல், ஆடியும் பாடியும் துதித்தல்

## 15. பறாளை ஈஸ்வர விநாயக ஆலயம்

1. பறாளை ஈஸ்வரவிநாயகர் ஆலய மூர்த்தி, தலம், தீர்த்தம், விருட்சம் என்பவற்றைக் குறிப்பிடுக?
   - ॐ மூர்த்தி – விநாயகர்
   - ॐ தலம் - பறாளை ஈஸ்வர விநாயக ஆலயம்
   - ॐ தீர்த்தம் - திருவடிநிலை சமுத்திர தீர்த்தக்கரை
   - ॐ விருட்சம் - மருதமரம்

2. பறாளை ஈஸ்வர விநாயகர் ஆலயத்தை போர்த்துகேயர் காலத்துக்கு முன்னர் பரிபாலனம் செய்தவர்கள் யாவர்?
   - ॐ சோழ மன்னர்களின் பிரதிநிதியாகிய திசைமழுவன்
   - ॐ ஆரியச் சக்கரவர்த்திகள்

3. பறாளை ஈஸ்வர விநாயகரது அற்புதங்களில் ஒன்றை குறிப்பிடுக?
   - ॐ இவ்வாலயத்தை இடிக்கவந்த போர்த்துக்கேய அதிகாரியை காக்கை வடிவில் வந்து கண்ணைக் கொத்தித் தடுத்தது.

4. பறாளை ஈஸ்வர விநாயகர் ஆலயத்தின் புராதான தேரின் சிறப்புக்கள் யாவை?
   - ॐ 1840 ஆம் ஆண்டு ''கரிக்குருவி ஸ்தபதியார்'' என்னும் தென்னிந்திய சிற்பியால் செய்யப்பட்டது
   - ॐ இது யாழ்பாணத்தில் செய்யப்பட்ட முதலாவது சிற்பத்தேராகக் கருதப்படுகின்றது
   - ॐ 148 சிற்பங்கள் இதில் இடம் பெற்றிருக்கிறது.

5. பறாளை ஈஸ்வர விநாயகர் ஆலயத்தின் மீது பாடப்பட்ட பள்ளு பிரந்தத்தையும் அதன் ஆசிரியர் பெயரையும் குறிப்பிடுக?
   - ॐ பறாளை விநாயகர் பள்ளு
   - ॐ நல்லூர் சின்னத்தம்பிப் புலவர்

6. கண்ணைக் கொத்திக் காக்கைப் பிள்ளையார் என அழைக்கப்படுபவர் யார்?
   - ॐ பறாளை ஈஸ்வர விநாயக ஆலயம்

## 16. திருக்கோணேச்சரம்

(திருக்கோணேச்சரநாதர், கிழக்கு, மாதுமையாள், 1624, தட்சிணகைலாயபுராணம், குளக்கோட்டன், போர்த்துக்கேயர்)

1. திருக்கோணச்சரம் கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ளது.
2. இத்தல இறைவன் திருக்கோணச்சரநாதர் இறைவி மாதுமையம்மாள் ஆவார்.
3. இத்தல வரலாற்றைக் கூறும் பிரதான நூல் தட்சிணகைலாய புராணம் ஆகும்
4. இத்தலத்திற்கு குளக்கோட்டன் எனும் மன்னன் திருப்பணிகளைச் செய்துள்ளான்,
5. இவ்வாலயம் 1624 ஆம் ஆண்டு போர்த்துக்கீசரால் அழிக்கப்பட்டது.

✢ சுருக்கமான விடை எழுதுக

1. இராவணனை நினைவுபடுத்த இக் கோயிலிலுள்ள சான்று யாது?
   - ௐ இராவணன் வெட்டு
2. இவ்வாலய தீர்த்தம் யாது?
   - ௐ பாபநாசம்
3. இவ்வாலயத்தின் மீது பாடல்களைப் பாடியவர்கள் யாவர்?
   - ௐ திருஞானசம்பந்தர், அருணகிரிநாதர்
4. புதிய கோயில் அமைக்கப்பட்டு மகா கும்பாபிசேகம் நடைபெற்ற ஆண்டு யாது?
   - ௐ 1963 ஆம் ஆண்டு
5. ஈழத்தில் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்றாக விளங்குவது எது?
   - ௐ திருக்கோணேஸ்வரம்
6. திருக்கோணேஸ்வரத்தின் அமைவிடம் எது?
   - ௐ கிழக்குமாகாணத்தின் திருகோணமலை மாவட்டத்தில்
7. இவ்வாலயத்தின் இறைவன் இறைவியின் பெயர் என்ன?
   - ௐ இறைவன் - திருக்கோணேச்சரநாதர்
   - ௐ இறைவி – மாதுமையம்பாள்
8. இவ்வாலயத்தின் தலவிருட்சம் எது?
   - ௐ கல்லாலமரம்
9. இத்தல வரலாற்றை அறிய உதவும் நூல்கள் எவை?
   - ௐ தட்சிணகைலாய புராணம்
   - ௐ திருக்கோணேச்சர புராணம்
   - ௐ கோணேசர் கல்வெட்டு
10. இவ்வாலயம் யாரால் எப்போது இடிக்கப்பட்டது?
    - ௐ போர்த்துக்கீச தளபதியான கொன்ஸ்ரன்டைன் டிசா என்பவரால் கி.பி 1624 ஆம் ஆண்டு
11. தட்சிணகைலாயம் எனப்போற்றப்படும் தலம் எது?
    - ௐ திருக்கோணேஸ்வரம்
12. திருக்கோணேஸ்வரத்தின் மறு பெயர்கள் எவை?
    - ௐ கோணபர்வதம்
    - ௐ திரிகோணம்
    - ௐ திரிகூடம்
    - ௐ மச்சேஸ்வரம்
13. இவ்வாலயத்தின் மீதெழுந்த இலக்கியங்கள் எவை?
    - ௐ திருக்கோணேஸ்வர திருப்பதிகம்
    - ௐ கோணேஸ்வரர் அகவல்

## 17. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில்

1. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் எங்கே அமைந்துள்ளது?
   - ௐ யாழ்ப்பாண நகரத்தில் இருந்து காங்சேன்துறை செல்லும் நெடுஞ்சாலையில்15மஅ தொலைவில் அமைந்துள்ளது.

2. மாவிட்டபுரம் என பெயர் வரக்காரணம் யாது?
   - ௐ மாருதப்புரவீக வல்லியின் குதிரை முகம் நீங்கியதால் மாவிட்டபுரம் என்ற பெயர் ஏற்பட்டது

3. இவ்வாலயத்தின் மூர்த்தி, தலம், தீர்த்தம், தலவிருட்சம் யாது?
   - ௐ மூர்த்தி – கந்தசுவாமி
   - ௐ தலம் - மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில்
   - ௐ தீர்த்தம் - கண்டகி தீர்த்தம்/அந்தர்வாவி (கீரிமலைக்கடல்)
   - ௐ தலவிருட்சம் - மாமரம்

4. மகோற்சவம் எப்போது நடைபெறும்?
   - ௐ பூர்வபட்ச சஷ்டித்திதியோடு கூடிய ஆனி உத்திர நாளன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆடி அமாவாசை அன்று தீர்த்தமும் அதற்கு முதல் நாள் தேருமாக 25 நாட்கள் நடைபெறும்


5. இவ்வாலயத்தில் நடைபெறும் வேறு விழாக்கள் எவை?
   - ௐ திருநடனத் திருவிழா
   - ௐ வேட்டைத்திருவிழா
   - ௐ கார்த்திகைத்திருவிழா
   - ௐ ஆறுமுகசுவாமி நடனத்திருவிழா
   - ௐ சப்பரத்திருவிழா
   - ௐ தீர்த்தத் திருவிழா

6. ஐந்து தேர்கள் வலம் வரும் ஆலயம் எது?
   - ௐ மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம்

7. மாருதப்புரவீகவல்லி யாருடைய மகள்?
   - ௐ திசை உக்கிர சோழன்

8. இவ்வாலயத்தில் விமர்சையாக கொண்டாடப்படும் நிகழ்வுகள் எவை?
   - ௐ சூரன் போர்
   - ௐ கந்த சஷ்டி

குறிப்பு



❖ **சரியாயின்** (□) எனவும், பிழையாயின் (**X**) எனவும் அடையாளமிடுக.

1. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் திருகோணமலையில் அமைந்துள்ளது ( × )
2. குதிரை முகம் நீங்கியதால் மாவிட்டபுரம் எனும் பெயர் ஏற்பட்டது ( □ )
3. இவ்வாலயத்தின் விருட்சம் ஆலமரமாகும் ( × )
4. 25 நாட்கள் இங்கே திருவிழாக்கள் நடைபெறும் ( □ )
5. சூரன்போர் விமர்சையாக இவ்வாலயத்தில் கொண்டாடப்படும் (□ )

## 18. திருகோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலயம்

1. பத்திரகாளி அம்மன் ஆலயம் எங்கு அமைந்துள்ளது?
   ௐ திருகோணமலையில்

2. பத்திரகாளி அம்மன் ஆலயம் மகோற்சவம் எத்தனை நாட்கள் இடம் பெறுகின்றது?
   ௐ 10 நாட்கள்

3. இவ்வாலயத்தில் நின்றபடியாக எவ்வாலயத்தைத் தரிசிக்கலாம்?
   ௐ திருகோணேஸ்வரம்

4. இவ்வாலயத்திற்கு எத்தனையாம் ஆண்டு தேராலயம் அமைக்கப்பட்டள்ளது?
   ௐ 1981 ஆம் ஆண்டு

5. இவ்வாலய தீர்த்தம் யாது?
   ௐ சுவாமி மலையின் அடிவாரத்திலுள்ள கடற்கரையாகும்.

6. இவ்வாலயத்தின் மகோற்சவம் எப்போது இடம்பெறும்?
   ௐ பங்குனி உத்திரத்தைத் தீர்த்ததோற்சவ தினமாகக் கொண்டு பத்து நாட்கள் நடைபெறும்

7. இவ்வாலயத்தில் இடம்பெறும் சிறப்பான திருவிழாக்கள் எவை?
   ௐ மஞ்சத்திருவிழா
   ௐ கைலாசவாகனத் திருவிழா
   ௐ சப்பரத் திருவிழா

8. இவ்வாலயத்தில் இருந்த கட்டுத்தேருக்குப்பதிலாக சித்திரத்தேர் மூன்றும் மஞ்சமும் எப்போது செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டது?
   ௐ 1972 ஆம் ஆண்டு

# 19. சீதையம்மன் ஆலயம்

1. சீதையம்மன் ஆலயத்தின் அமைவிடம் யாது?
   ௐ மத்திய மாகாணத்தில் நுவரெலியா மாவட்டத்தில்

2. அசோக வனம் என அழைக்கப்படுவற்கான காரணம் யாது?
   ௐ அசோக மரங்களால் சூழப்பெற்ற அடர்ந்த காடாக இருந்தமையால்

3. ஆலயப்பகுதியில் கிணறு வெட்டிய போது நடைபெற்ற அற்புதம் யாது?
   ௐ வெட்டப்பட்ட கிணற்றில் ஸ்ரீராமன், சீதாதேவி, லக்சுமணன், ஆஞ்சனேயர் ஆகியயோரின் திருவுருவங்கள் கறுப்பு நிறத்தில் தத்ரூபமாகக் காட்சியளித்தன

4. சீதையம்மன் ஆலயத்திலுள்ள மூலமூர்த்திகள் எவை? அவற்றினைக் குறிப்பிடுக
   ௐ ஸ்ரீராமபிரான், சீதாதேவி, இலக்குமணன், ஆஞ்சனேயர்

5. தரப்பட்ட சொற்களை வைத்து கீறீட்ட இடங்களை நிரப்புக
   (1998 ஆம் ஆண்டு, கர்ண பரம்பரை, 2000 ஆம் ஆண்டு, இரதபவனி)

1. ஆலயத்தின் சிறப்பினை <u>கர்ண பரம்பரை</u> கதைகளினூடாக அறியலாம்.

2. <u>1998 ஆம் ஆண்டு</u> பாலஸ்தாபனம் செய்யப்பட்டு <u>2000 ஆம் ஆண்டு</u> மகாகும்பாபிடேகமும் நடைபெற்றது.

3. 2013 ஆம் ஆண்டிலிருந்து பட்டிப்பொங்கல் தினத்தின்று <u>இரதபவனி</u> நடைபெறுவது இவ்வாலயத்தின் சிறப்பம்சமாகும்.

## 20. இலங்கையில் உள்ள சமயங்கள்

1. பௌத்த சமயத்தவரின் வழிபாட்டிடம் எவ்வாறு அழைக்கப்படும்?
   ௐ பௌத்த விகாரை

2. கிறிஸ்தவர்களுடைய முதன்மையான நூல் எது?
   ௐ பைபிள்

3. இஸ்லாம் சமயத்தின் வழிபாட்டிற்குரியவர் யார்?
   ௐ அல்லாஹ்

✣ அட்டவனையை பூரணப்படுத்துக

| சமயம் | வழிபடப்படுபவர் சமய முதலவர் | முதன்மையான நூல் | வழிபாட்டு இடம் |
|---|---|---|---|
| சைவம் | சிவபெருமான் | வேதம், ஆகமம் | கோயில் |
| பௌத்தம் | புத்தர் | திரிபீடகம், தம்மபதம் | விகாரை |
| கிறிஸ்தவம் | இயேசு | பைபிள் | தேவாலயம் |
| இஸ்லாம் | அல்லாஹ் | திருக்குர்ஆன் | பள்ளிவாசல் |